ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2037/13 - 2017 සැප්තැම්බර් මස 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.09.21
*2037/13 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும்

### வடமேல் மாகாண மாகாண சபை

வடமேல் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களினால் செய்யப்படும் அறிவித்தல்

வடமேல் மாகாணத்தின் ஆளுநர் அமரா பியசீலி ரத்நாயக்க ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 13 ஆம் திருத்தத்தின் 154(ஈ) ஆம் பிரிவின் (5) ஆம் உப பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி, கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வடமேல் மாகாண சபையின் புதிய அமைச்சர் குழுக்கள் நியமிக்கப்பட்டனர். அதன்படி, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 165 ஆம் பிரிவு மற்றும் "157 அ 7" ஆம் பிரிவிற்கமைய, கௌரவ தசநாயக்க குணரத்ன பஸ்நாயக்க முதியன்சேலாகே தர்மசிறி தசநாயக்க அவர்கள் மற்றும் கௌரவ பியசிறி ராமநாயக்க அவர்கள் 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி கொழும்பிலும், கௌரவ ஆர். பீ. டீ. குணதாச தெஹிகம அவர்கள் மற்றும் கௌரவ டபிள்யூ. ஜே. சுமல் திசேரா அவர்கள் 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதி குருநாகலில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்காக என் முன்னிலையில் உடன்பட்டது/சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது பற்றி இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன்.

| | |
|---|---|
| 1. கௌரவ தசநாயக்க குணரத்ன பஸ்நாயக்க முதியன்சேலாகே தர்மசிறி தசநாயக்க அவர்கள் | வடமேல் மாகாண நிதி மற்றும் திட்டமிடல் பொறியியல் சேவை, சட்டமும் சமாதானமும், கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிருவாக, பொருளாதார மேம்பாடு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கலும் வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலா நடவடிக்கை பற்றி அமைச்சராக. |
| 2. கௌரவ பியசிறி ராமநாயக்க அவர்கள் | வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, காணி, மின்சக்தி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார, கலாச்சாரமும் கலை நடவடிக்கை மற்றும் தகவல் தொழில்நுட்பம் பற்றிய அமைச்சராக. |
| 3. கௌரவ ஆர். பீ. டீ. குணதாச தெஹிகம அவர்கள் | வடமேல் மாகாண தெரு, போக்குவரத்து, வீடமைப்பு, கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி பற்றிய அமைச்சராக. |
| 4. கௌரவ டபிள்யூ. ஜே. சுமல் திசேரா அவர்கள் | வடமேல் மாகாண விவசாய, நீர்ப்பாசன, மீன்பிடி, மிருகவள மற்றும் சுகாதாரமும் கமநல அபிவிருத்தி பற்றிய அமைச்சராக. |

அமரா பியசீலி ரத்நாயக்க,
வடமேல் மாகாண ஆளுநர்.

10- 85

1A - PG 3694 — 17 (2017/09) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.